


தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் நேற்று (24.10.2024) சென்னை கலைவாணர் அரங்கக் கூட்டரங்கில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வேபராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பெ.அன்புசோழன், (மக்கள் தொடர்பு) ச.செல்வராஜ், (செய்தி) மற்றும் செய்தித் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமை பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மேடவாக்கம் ப.ரவி சிவபுஷணம் ரவி ஆகியோரின் புதல்வர் ஆர்.எஸ்.லோகேஸ்வரா – லாவண்யா ஆகியோரின் திருமண வரவேற்பை கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் தலைமையேற்று நடத்தி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர், டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.காந்தி, ஆவடி சா.மு. நாசர், புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி, முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, டி.கதிர் ஆனந்த் எம்.பி, கே.விஷ்ணு பிரசாத் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், எஸ்.அரவிந்த் ரமேஷ், மாதவரம் எஸ்.சுதர்சனம், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகராஜா, எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, எஸ்.அம்பேத்குமார் மற்றும் க.சோமு, பாலவாக்கம் மு.மனோகரன், தா.விஸ்வநாதன், ஆர்.ஹரிகிருஷ்ணன், எம்.கே.ஏழுமலை, தா.பஷீர், சங்கீதா பாரதி, ராஜன், பெருங்குடி ரவிச்சந்திரன், சைதை கிருஷ்ணமூர்த்தி, எஸ்.துரைராஜ், தாம்பரம் காமராஜ், வே.கருணாநிதி, சி.பிரதீப் சந்திரன், ஜி.வெங்கடேசன், ஜி.கே.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். எஸ்.ரவி, எச்.டி.போஸ், எஸ்.சுரேஷ் ஆகியோர் நன்றி கூறினர்.

### மாவட்ட ஆய்வுக் கூட்டங்களில்

# வங்கி அதிகாரிகள் தவறாமல் பங்கேற்க உத்திரவிடுங்கள்!

## ஒன்றிய நிதி அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, அக்.25

வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாவட்ட ஆய்வுக் கூட்டங்களில் வங்கி அதிகாரிகள் தவறாமல் கலந்து கொள்ள உத்தரவிடுங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர்கள் பங்கேற்கும் மாவட்ட அளவிலான ஆய்வு கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. இதில் வழக்கமாக உள்ளாட்சி பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலானவர்கள் அழைப்பின் பெயரில் கலந்து கொள்வர். அரசு திட்ட பணிகளுக்கான கடன்கள், உழவர் கடன்கள், கல்வி கடன்கள், மாவட்ட அளவில் புதிய வங்கி கிளைகள்



துவங்குதல் போன்றவை ஆய்வு செய்யப்படும்.

பொதுவாக முன்னணி வங்கிகள் அனைவருக்கும் வசதியான நாட்களில் இத்தகைய கூட்டங்கள் நடப்பதற்கான முன்னெடுப்புகளைச் செய்யும். அரசு திட்டங்கள் மக்களைச் சென்று சேர்வதற்கான நடவடிக்கைகள் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

சமீபத்தில் சென்னை மாவட்ட செயலாளர் தலைமையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூடம் நடைபெற்றது. இதில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மற்றும் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். ஆனால் முன்னணி வங்கிகளான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் வங்கியைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

இத்தகைய மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டங்களில், மாவட்டத்தில் உள்ள அரசு வங்கிகளின் செயல்பாடுகள், குறிப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் அட்டை (கிரெடிட் கார்டு), வங்கி கடன் முதலானவை ஆய்வு செய்யப்படுவதால், இத்தகைய கூட்டங்களில் வங்கி அதிகாரிகள் பங்கேற்பது மிகவும் அவசியமாகும்.

எனவே, நிதி அமைச்சர் அவர்கள், இதுபோன்ற ஆய்வு கூட்டங்களில் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என ஆணையிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அவர்கள் கடிதத்தில் கூறியுள்ளார்.

மேலும், இக்கடிதத்தின் நகலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஸ்டேட் பேங்க் தலைவர் செல் சீனிவாசலு செட்டி அவர்களுக்கும், இந்தியன் வங்கியின் மேலாண்மை இயக்குனர் சந்திலால் ஜெயின் அவர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

### முரசொலி பிழை திருத்துனர் பிரிவில் பணியாற்றும்

# தி.சுபாராணி தந்தை பி.ஜெயராமன் மறைவு!

மதுரை, அக்.25-



முரசொலி பிழை திருத்துனர் பிரிவில் பணியாற்றும் தி.சுபா ராணியின் தந்தை பி.ஜெயராமன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

முரசொலி பிழை திருத்துனர் பிரிவில் பணியாற்றும் தி.சுபாராணியின் தந்தை பி.ஜெயராமன் அவர்கள் 22.10.2024 செவ்வாய்க் கிழமை உடல்நலக்குறைவால் மதுரையில் மறைவெய்தினார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 23.10.2024 அழகர் நகர், சிந்தாமணி ரோடு, மதுரையில் நடைபெற்றது.

மறைவெய்திய பி.ஜெயராமனுக்கு விஜய லட்சுமி என்ற மனைவியும், பாண்டிச் செல்வி - (ரவிச்சந்திரன்), சுபாராணி - (தியாகராஜன்), தீபா ராணி - (சத்தீஷ்குமார்) ஆகிய மகள்களும், பாண்டியராஜன் - (ஜோதி) என்ற மகனும் உள்ளனர்.

### எஸ்.முரளி - நந்தனம் கி. மதி முன்னிலையில்

# மயிலை கிழக்கு-மேற்கு பகுதி வாக்குச்சாவடி முகவர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்!

## மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் - கோவி.லெனின் பங்கேற்பு!

சென்னை, அக்.25

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு / மேற்கு பகுதி தி.மு.க சார்பில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் இன்று (25.10.2024 வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணியளவில் முத்தமிழ் பேரவை ராஜா அண்ணா மலைபுரம், சென்னை -28 இல் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலைத.வேலு, தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாநில தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் மயிலை தொகுதி பார்வையாளர் கோவி.லெனின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், வி. வெற்றி வேல் கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, டி. ராஜவேலு, சீ.கிருஷ்ண மூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன் மற்றும் மாநில,மாவட்ட, பகுதி,வட்ட நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,பாக பொறுப்பாளர்கள்,பாக உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வரவேற்கிறோம்.

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், அக். 25-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு உறுப்பினர் கூட்டம் 28.10.2024 - திங்கட்கிழமை அன்று காலை 9.30 மணி அளவில் படப்பை சி.என்.சி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் மு.சுப்பிரமணி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குரு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மீஞ்சூர், கே.பாஸ்கர் சுந்தரம், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர், சரஸ்வதி மனோகரன், ஒன்றியக் குழுத் தலைவர், ஒன்றிய நிர்வாகிகள் வ.நந்த கோபால், ஏ.மணி வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, வி.ஹரி, மு.ராஜேந்திரன், மா.பரிமளாழகன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், சங்கீதா வேலு, பொன்.ரமேஷ்கவி, எஸ். கர்ணன், மலர்விழி தமிழ் அமுதன், கு. ஏழுமலை, லட்சுமிஞான சேகர்,ச. பாலகிருஷ்ணன், ஜி.ஏ. ராயப்பன், எஸ்.வைரம், தினேஷ் கந்தசாமி, ம.ரேவதி, கே.எம்.சி சத்திய மூர்த்தி, வி. எஸ். கோதண்டராமன், என்.எஸ். இளங்கோ, இளைஞர் அணி, ப.அறிவொளி, க.பா.ஆடலரசு, ரா. தீபக், மா.சே. பிரகாஷ்,லோ, சுதாகர், மாணவர் அணி, அ.ஜமீர், இரா.குமரவேல், செ. பார்த்திபன், பொன். இளைய பாரதி, ஆர். சையத்ரமீஸ், இ.பாலாஜி, மகளிர் அணி.மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், விவசாய அணி, ஜி. இருசப்பன், விவசாய தொழிலாளர் அணி,ஏ.இ. பரசுராமன்,ம. அசோக்குமார்,ஏ.இ. பஞ்சாட்சரம், வழக்கறிஞர் அணி, ப. வேல்முருகன், ச.ரஞ்சித்குமார்,இரா. சந்திரசேகர், தகவல் தொழில் நுட்ப அணி,மூ. குமார்,வ. வீரபாண்டியன்,ர. தமிழ்தாசன், கா. யுவராணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் ஒன்றியம் பாண்டேஸ்வரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்டச் செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் தயாளன், பாண்டேஸ்வரம் ஊராட்சி மன்ற தலைவர் ரேகா, ஒன்றிய கவுன்சிலர்கள் பா.பிரபு, குணா தயாநிதி, மோரை ஊராட்சி மன்ற தலைவர் திவாகர், மற்றும் தலைமை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

### விக்டோரியா பொது அரங்கினை

# புனரமைத்து, மறுசீரமைப்பு செய்யும் பணி!

## மேயர் ஆர்.பிரியா ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, அக்.25-

விக்டோரியா பொது அரங்கம் சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டடமாக திகழ்கின்றது. இக்கட்டடம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியாவின் பெயரால் பெயரிடப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். மேலும், சென்னை மாநகரின் கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப்பட்ட இக்கட்டடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ராபர்ட் சிசோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் நம்பெருமாள் செட்டியாரால் 1888ஆம் ஆண்டு இந்த அரங்கம் கட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனடிப்படையில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியானது 20.03.2023 அன்று தொடங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இரண்டு மாடி கொண்ட இக்கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 34 மீட்டர் ஆகும். தற்பொழுது இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மறுசீரமைக்கும் பணியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (24.10.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்படும் பணிகள், கட்டடத்தின் உறுதித்தன்மை மாறாமல் மறுசீரமைப்பு செய்தல் உள்ளிட்ட விவரங்களை மேயர் அவர்கள் கேட்டறிந்து ஆய்வு செய்தார். இப்பணிகளை உரிய தொழில் நுட்ப வழிகாட்டுதலின்படி மேற்கொண்டு குறித்த காலத்தில் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மேற்பார்வை பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) பி.வி. பாபு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரவாயல் 149–வது வட்டம் வட்ட அவைத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், 149 வது வட்ட கழக செயலாளர் த.ரமேஷ், 149 வது வார்டு மாமன்ற உறுப்பினர் , செல்வி ரமேஷ் முன்னிலையில், காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். அருணாசலம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன், பால்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தி.நா.கமலநாதன், குப்பு ராஜேந்திரன், குமார், துரைசாமி, சுந்தராஜன்,மோகன்ராஜ், ஜெயவேல் ,வீரராகவன்,முரளி, கு.சரவணன், சிவலிங்கம், வினோத், விஜய், ஆறுமுகம், மோஸஸ் சுரேஷ், ராஜா, கணேசன், சிவராமகிருஷ்ணன், ஹேமகுமார்,மோகனவேல், கார்த்திக், சிண்ணு, சத்திய நாராயணன், ராமஜெயம், சரவணன், அரசு, கிருஷ்ணன், பாலமுருகன், பொன்முத்து ரமேஷ், சேகர், ரவி, ராஜேந்திரன், , மூர்த்தி, சுஜாதா நரசிம்மன், செல்வகுமாரி, கீதா, பவானி, ஜெயந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 101 அடியாக உயர்வு!

மேட்டூர், அக்.25-

தமிழ்நாடு, கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 101.40 அடியாக உயர்ந்து காணப்பட்டது.

அணைக்கு 29 ஆயிரத்து 307 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 7500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கன அடியும் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் 66.66 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.



சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனை மற்றும் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்று 24–10–2024 அன்று காலை மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், தொகுதி பொறுப்பாளர்கள் சி எச் சேகர், கௌதமன், தமிழன் பிரசன்னா, மாவட்ட நிர்வாகிகள் து. விக்டர், ஆர்.என். துரை,வி.எஸ். கலைச்செல்வன், ஏ. சங்கீதா, ஜெ. எஸ். அகஸ்டின் பாபு, பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.